விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 143 வள்ளுவர் ஆண்டு 2057 சித்திரை 28 திங்கட்கிழமை (11.05.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



03ஆம் பக்கம் பார்க்க

## தமிழக முதல்வர் விஜய்க்கு ஜனாதிபதி அநுர வாழ்த்து


03ஆம் பக்கம் பார்க்க



05ஆம் பக்கம் பார்க்க

### திறைசேரி நிதி மோசடி
## அமெரிக்க வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டமை கண்டறிவு

(கொழும்பு)

திறைசேரியின் கணினி கட்டமைப்பிற்குள் ஊடுருவிய மோசடிக் குழுவினர் அவுஸ்திரேலிய நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களில் ஒரு பகுதி நிதியை 02ஆம் பக்கம் பார்க்க

### எயார் பஸ் முறைகேடு
## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் நாளை முன்னிலையாகிறார் மகிந்த

(கொழும்பு)



எயார் பஸ் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விசாரணைகளுக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை 12ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகவுள்ளார். 16ஆம் பக்கம் பார்க்க

### முதலமைச்சர் விஜயை
## தமிழில் வாழ்த்தினார் பாரதப் பிரதமர் மோடி

(புதுடில்லி)



தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சராக ஜோசப் 15ஆம் பக்கம் பார்க்க

### 'ஜோசப் விஜய் எனும் நான்'
# தமிழ்நாட்டின் முதல்வராக விஜய் நேற்று பதவியேற்பு



(சென்னை)

தமிழ்நாட்டில் 59 ஆண்டுகளாக இடம்பெற்ற திராவிட ஆட்சிக்கு முற்றுப்புள்ளியிட்டு பல தடைகளையும் சூழ்ச்சிகளையும் தன் வெற்றிப் படிக்கட்டாக மாற்றி புதிய சரித்திரம் படைத்து புதிய முதலமைச்சராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் நேற்று பதவியேற்றார். (15ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.போதனா வைத்தியசாலையில்
## அனைத்து சேவைகளும் வழமைபோல் இடம்பெறும்
### பணிப்பாளர் சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கிளினிக் உள்ளிட்ட 02ஆம் பக்கம் பார்க்க

## சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக எம்.பிக்கள்

(கொழும்பு)

நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தி மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கில் அனைத்து மாவட்டங்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை 'மாவட்ட 15ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சைகள் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

2023/2024ஆம் ஆண்டுக்குரிய ஆசிரியர் காலாசாலை இறுதிப் பரீட்சைகள் 16ஆம் பக்கம் பார்க்க

## கபிலவின் இறுதிச்சடங்கு நேற்று உடற்கூற்று அறிக்கை இன்று

(கொழும்பு)

சடலமாக மீட்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் கபில சந்திரசேனவின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்ற நிலையில் மரணம் தொடர்பில் பிரேத பரிசோதனை அறிக்கை இன்று (11) திங்கட்கிழமை கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. 02ஆம் பக்கம் பார்க்க

## ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க முதல்வர் விஜய் உதவ வேண்டும்
### சிறீதரன் எம்.பி கோரிக்கை




(கிளிநொச்சி)

தமிழக முன்னாள் முதலமைச்சர்கள் ஜெயலலிதா, மு.க.ஸ்டாலின் போன்றோர் தமிழக சட்டசபைகளில் ஈழத்தமிழர்கள் தொடர்பாக கொண்டு வந்த தீர்மானங்களை விட 15ஆம் பக்கம் பார்க்க

## மே 18ஐ தமிழின அழிப்பு நாளாக சட்டசபையில் நிறைவேற்றுங்கள்
### முதல்வர் விஜய்க்கு கஜேந்திரகுமார் கடிதம்

(யாழ்ப்பாணம்)



ஸ்ரீ லங்கா அரசு ஈழத்தமிழ் மக்கள் மீது அரங்கேற்றிய தமிழினவழிப்பை சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தி வரும் ஈழத்தமிழர்களுக்கு வலுச்சேர்ப்பதற்கு 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க...

அமெரிக்காவின் டெலவெயா மாநிலத்திலுள்ள வங்கியின் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த கணக்கானது டெலவெயா மாநிலத்தில் உள்ள "ரி.டி" வங்கியின் கிளையொன்றில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதோடு, இணைய வணிகப் பதிவுகளில் ஈடுபடும் நிறுவனமொன்றின் பெயரில் அது இயங்கி வந்துள்ளதாக விசாரணைகளை முன்னெடுக்கும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மோசடி செய்யப்பட்ட முழுத்தொகையும் ஒரே கணக்கிற்குச் செல்லவில்லை எனவும் பல்வேறு கணக்குகளுக்குப் பணம் பிரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதில் ஒரு பகுதி மாத்திரமே குறித்த கணக்கிற்கு வந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு, அமெரிக்காவின் பெடரல் புலனாய்வுப் பணியகம் மற்றும் அவுஸ்திரேலிய அதிகாரிகளுடன் இணைந்து முன்னெடுத்த விசாரணைகளின் மூலமே இந்தத் தகவல்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவிற்கான இருதரப்புக் கடன் கொடுப்பனவாக வழங்கப்படவிருந்த இந்தப் பணம், நிதி அமைச்சின் மின்னஞ்சல் கணக்குகள் ஊடுருவப்பட்டதன் விளைவாக மோசடிக்காரர்களின் கணக்குகளுக்குச் சென்றுள்ளதோடு இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அரச நிதி பற்றிய குழு, திறைசேரியின் கடன் சேவை செலுத்தும் செயல்முறை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதால், பௌதீக ஆவணங்களோ அல்லது கையொப்பங்களோ இன்றி குறிப்பிட்ட அதிகாரிகளின் அதிகாரத்தின் கீழ் மாத்திரமே இவை முன்னெடுக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அனைத்து...

சகல சேவைகளும் இன்று திங்கட்கிழமை வழமை போன்று முன்னெடுக்கப்படும் என வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் (09) அதிகாலை யாழ். போதனா வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தைத் தொடர்ந்து சுகாதார அமைச்சின் துரித நடவடிக்கையின் கீழ் கொழும்பு மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து மூன்று பார ஊர்திகள் மூலம் மருந்துகள் கொண்டுவரப்பட்டன.

கொண்டு வரப்பட்ட அனைத்து மருந்துகளும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட மருந்துக் களஞ்சியத்தில் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இன்று முதல் சகல சேவைகளும் வழமைபோன்று நடைபெறும்.

மேலும் ஒரு தொகுதி மருந்துகளும் எதிர்வரும் நாட்களில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படவுள்ளன.

கிளினிக்குகளுக்கு வருகை தரும் நோயாளிகளுக்குத் தேவையான அனைத்து மருந்துகளையும் வழங்குவதற்கான முழுமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7,33)

### மத்திய வங்கி, திறைசேரி நிதி மோசடி

# உயர் அதிகாரிகளை காக்க நிதிக்குழு கடும் பிரயத்தனம்

### சுயாதீன சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மத்திய வங்கி மற்றும் திறைசேரி தொடர்பான சர்ச்சைக்குரிய பணக் கொடுக்கல் வாங்கல் குறித்து, பாராளுமன்ற நிதிக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையானது, உண்மையான குற்றவாளிகளைப் பாதுகாக்க முயற்சிப்பதாக சுயாதீன சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

எட்டுப் பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையின் மூலம் உயர் அதிகாரிகளைப் பாதுகாத்து, தவறை கீழ்மட்ட அதிகாரிகள் மற்றும் கணினி கட்டமைப்புகள் மீது சுமத்த முயற்சிப்பதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121-இன் கீழ் நிதிக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள சட்டபூர்வப் பொறுப்பை இந்த அறிக்கை மீறியுள்ளதாகவும் இது வெறும் தகவல்களைத் திரட்டும் ஒரு அறிக்கையாக மாத்திரமே அமைந்துள்ளதாகவும் சட்டத்தரணிகள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த மோசடியுடன் தொடர்புடைய அதிகாரிகள் தமது தவறுகளை மறைப்பதற்கும் ஆவணங்களைத் தயாரிப்பதற்கும் நிதிக்குழு ஒரு மாத கால அவகாசத்தை வழங்கியதன் மூலம் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் 30 நாட்கள் கடந்தும் மத்திய வங்கியின் நிர்வாக அதிகார சபை இது குறித்து மௌனம் காப்பதாகவும் மத்திய வங்கியின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கே குழு செயற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திறைசேரி, வெளிநாட்டு வளங்கள் மற்றும் கடன் முகாமைத்துவப் பிரிவுகள் தமக்கிடையே எவ்வித ஒருங்கிணைப்பும் இன்றி மூன்று சுயாதீனமான கணினி கட்டமைப்புகளைப் பயன்படுத்துவதே இந்த நெருக்கடிக்குக் காரணம் என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி ஒழுங்குவிதி 135-இன் கீழ் நிதி அதிகாரத்தை கையளிக்கும் போது பிரதான கணக்கீட்டு அதிகாரியான நிதிச் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும முறையான விழிப்புணர்வுடன் செயற்படவில்லை என சுயாதீன சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வளவு பெரிய தொகையிலான நிதிப் பொறுப்பை ஒரு தனிப் பணிப்பாளரிடம் ஒப்படைப்பது ஒரு தவறான நிர்வாக நடைமுறை என்றும் உண்மையான குற்றவாளிகளை மறைக்க வேண்டிய அரசாங்கத்தின் தேவைக்காக பாராளுமன்ற நிதிக்குழு தனது உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்கியிருப்பது குறித்து ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. (ந-7)

## கபிலவின்...

கோட்டை நீதிவானின் உத்தரவுக்கு அமைவாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் நியமித்த கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி ஸ்ரீயந்த அமரரத்ன தலைமையிலான ஐவர் கொண்ட குழு இந்தப் பிரேத பரிசோதனையை முன்னெடுத்திருந்தது.

கோட்டை நீதிவான் நீதிமன்றில் இடம்பெறும் மரண விசாரணைகளில் இந்த அறிக்கை நிபுணத்துவ சான்றாக ஆராயப்படவுள்ளது.

இதனிடையே கபில சந்திரசேனவின் மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடமிருந்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு மாற்றப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க லொக்கு ஹெட்டியின் கீழ் சிறப்புக் குழுவொன்று இந்த மரணம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இந்நிலையில் கபில சந்திரசேனவின் மரணம் கொலையா? தற்கொலையா? என்பதைக் கண்டறிவதற்கு சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்...



பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com



கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின்
கணித பாட ஆசிரியர்
திரு. செ.செல்வக்குமரன்
அவர்களின் தந்தையார்

அமரர் வயித்திலிங்கம் செல்லையா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 24.11.1947
மறைவு 09.05.2026

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மகாஜனக் கல்லூரி

(C-5607)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆழமான எமது உறவு தொடரும்

## தமிழக முதல்வர் விஜய்க்கு ஜனாதிபதி வாழ்த்து

**(கொழும்பு)**

**இந்தியா- இலங்கையிடையிலான வலுவான கூட்டாண்மையின் கீழ் தமிழகத்துடன் இணைந்து பணியாற்றுவதன்மூலம் பிராந்திய செழிப்பையும் முன்னேற்றத்தையும் அடைய நான் ஆவலுடன் காத்திருக்கின்றேன் என தமிழக முதல்வராக பதவியேற்ற விஜய்க்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.**



அவர் வெளியிட்ட வாழ்த்து செய்தியில்,


தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கையும் தமிழ்நாடும் வரலாறு, கலாசாரம், வணிகம் மற்றும் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் மக்களுக்கிடையிலான ஆழமான உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் நெருக்கமடைந்து வரும் சூழலில், எமது எதிர்காலம் மிகப்பெரிய பொருளாதார வாய்ப்புகளையும் முன்னேற்றத்தையும்கொண்டுள்ளது.

இந்திய-இலங்கை இடையிலான வலுவான கூட்டாண்மையின் கீழ், தமிழகத்துடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் பிராந்திய செழிப்பையும் முன்னேற்றத்தையும் அடைய நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்.

முதலமைச்சர் விஜய் மற்றும் தமிழக மக்கள் அனைவருக்கும் மகத்தான வெற்றிகள் கிடைக்க இலங்கை மக்கள் சார்பாக எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (க-8)

# 'யாழ் தேவி' கடுகதி தொடருந்து சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பம்



(கொழும்பு)

கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை வரை பயணிக்கும் "யாழ் தேவி" கடுகதி தொடருந்து சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொடருந்து திணைக்களம் அறிவித்துள்ளது.

பயணிகளின் வசதிக்காக இந்த தொடருந்தில் நான்கு முதலாம் வகுப்பு பெட்டிகள் குளிரூட்டப்பட்ட வசதியுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஆசனங்களை பயணிகள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள முடியும்.

பயணிகள் தொடருந்து நிலையங்களுக்குச் செல்லாமலேயே, இலங்கை தொடருந்து திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான seatreservation.railway.gov.lk ஊடாக ஆசனங்களை இலகுவாக முன்பதிவு செய்ய முடியும்.

வடபகுதிக்கும் தென் பகுதிக்கும் இடையிலான போக்குவரத்துத் தொடர்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், நவீன வசதிகளுடன் இந்தச் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# இரு குழுக்களுக்கிடையே மோதல் 4 பேர் வைத்தியசாலையில்

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளிநொச்சி விவேகானந்தர் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவமானது முற்பகை காரணமாக ஏற்பட்ட தொலைபேசி உரையாடல் காரணமாகவே குறித்த தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட கத்தி மற்றும் கூரிய ஆயுதங்களாக தடயப் பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(கரணவாய்)

வேலும்மயிலும் பவுண்டேசனில் கற்கைநெறிகளை பூர்த்தி செய்து சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ஒடக்கரை வீதி, பருத்தித்துறையில் உள்ள வேலும் மயிலும் புவுண்டேசன் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் ஆங்கிலம், கணனி, சிங்களம் ஆகிய கற்கை நெறிகள் மற்றும் தையல் பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்து பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (8-60)

# புதிய நிர்வாகம் தெரிவு

(கரணவாய்)

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ் கிளை இளைஞர் அணியின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ் கிளைத் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிர்வாகத் தெரிவின் போது, யாழ் கிளை இளைஞர் அணியின் புதிய தலைவராக ஊடகவியலாளர் லின்ரன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (8-60)

## போதைப் பொருளுடன் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியில், வட மாகாண குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது, பாரிய அளவு கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 7 கிலோகிராம் 320 கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8)

# 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தவசியாகுளம் அ.த.க. பாடசாலை நடைபவனி



(வவுனியா)

125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா தவசியாகுளம் அ.த.க பாடசாலையின் நடை பவனி ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இருந்து பாடசாலை வரை குறித்த நடை பவனி இடம்பெற்றது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பழைமையான பாடசாலையான தவசியா குளம் அ.த.க பாடசாலை கடந்து வந்த பாதைகளையும், சாதனைகளையும் வெளிப்படுத்தும் வகையில் குறித்த நடைபவனி இடம் பெற்றிருந்தது.

பாடசாலையின் பழைய மாணவியான 78 வயது மூதாட்டி முதல் பல்வேறு துறைகளிலும் தற்போது கடமையாற்றும் பழைய மாணவ மாணவிகள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த நடை பவனியில் கலந்து கொண்டு பாடசாலையின் சிறப்பை வெளிப்படுத்தி இருந்தனர். (8-250)

# தேனிசை செல்லப்பாவிற்கு அஞ்சலி



(தருமபுரம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையினரின் ஏற்பாட்டில் மறைந்த பாடகர் தேனிசை செல்லப்பாவின் நினைவேந்தல் நிகழ்வு கரைச்சி பிரதேசசபையின் புதிய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் , பிரதேசசபைத்தவிசாளர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், பொது அமைப்பு சார்ந்தோர், கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# பாடசாலை மட்ட கால்பந்தாட்டப் போட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி சம்பியன்



வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வியாழக் கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.


இதனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை.

இரண்டாவது பாதியாட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி துளசிகன் முதலாவது கோலைப் பதிவு செய்ய அடுத்த நிமிடங்களில் கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வீரர் டிசாந்தன் ஒரு கோலைப் பதிவு செய்து கோல்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தினார்.

இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது. இருப்பினும் தேவரையாளி இந்துக் கல்லூரி வீரர் மனோஜ் ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் தேவரையாளி இந்துக் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (3-90)

# கில்,சாய் சுதர்சன் அதிரடி

## குஜராத்திடம் வீழ்ந்த ராஜஸ்தான்



நடப்பு ஐ.பி.எல்.தொடரின் 52 ஆவது லீக் போட்டி ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதையடுத்து, குஜராத் அணி முதலில் களமிறங்கியது.

கில், சாய் சுதர்சன் இருவரும் சிறப்பாக ஆடி அணிக்கு ஓட்டங்களைக் குவித்தனர். சாய் சுதர்சன் 55 ஓட்டங்களும், கில் 84 ஓட்டங்களும் எடுத்தனர். பின்னர் வாஷிங்டன் சுந்தர் சிறப்பாக விளையாடி 37 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர்கள் முடிவில் குஜராத் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 229 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து 230 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களத்தில் இறங்கிய ராஜஸ்தான் அணியால் குஜராத் அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இதன் மூலம் குஜராத் அணி 7 ஆவது வெற்றியை பதிவு செய்ததுடன் புள்ளிப் பட்டியலில் முன்னேறியுள்ளது. (3)

# இந்து சகோதரர்களின் போர் 15 ஆம் திகதி ஆரம்பம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான "இந்து சகோதரர்களின் போர்" எனும் துடுப்பாட்டத் தொடர் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 16 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மூன்றாவது தடவையாக இடம்பெறவுள்ள இந்த துடுப்பாட்டச் சமரில் கடந்த 2 தடவைகள் இடம்பெற்ற போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# ஆண்களுக்கான ஹொக்கி போட்டி

## தெல்லிப்பளை பிரதேச செயலக அணி சம்பியன்

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ் மாவட்ட செயலகத்தின் விளையாட்டு பிரிவினரால் நடத்தப்பட்ட ஆண்களுக்கான ஹொக்கி சுற்றுப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

யாழ் மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான ஹொக்கிச் சுற்றுப் போட்டியின், இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணி மோதியது.

இதில் ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (3-90)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டை மகாஜன சன சமூக நிலையத்தின் 75 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள் ளது.

அனைத்து போட்டியாளர் களையும் பங்கு பற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்து ள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு 077 851 7575, 077 242 5414, 077 604 2858 ஆகிய தொலைபேசி இலக் கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். (8)

# உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மரநடுகை நிகழ்வு



(கரணவாய்)

உலக செஞ்சிலுவை தினத்தை சிறப்பிக்கும் முக மாக, இலங்கை செஞ்சிலு வைச் சங்கத்தின் யாழ் கிளை யினரால் மரநடுகை நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 8 ஆம் திகதி உலக செஞ்சிலுவை தினமாக உல களாவிய ரீதியில் கொண்டாட ப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், சூழல் பாதுகாப்பினை வலியுறு த்தியும் இந்நாளை நினை வுகூர்ந்தும் யாழ்ப்பாணத் தில் இந்த மரநடுகை செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது இலங்கை செஞ்சிலுவைச் சங் கத்தின் யாழ்.கிளைத் தலைமை அலுவலக வளா கத்தில் இலங்கை செஞ் சிலு வைச் சங்கத்தின் யாழ் கிளைத் தலைவர் ச.திரவியராசா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்கத்தின் உத்தியோக த்தர்கள் ,யாழ் கிளை இளை ஞர் அணியினர் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொண்டு மரக் கன்றுகளை நாட்டி வைத்த னர். (8-60)

# உள்ளூர் இழுவைமடி படகுகளால் வடக்கு மீனவர்கள் பாதிப்பு

(கரணவாய்)

**உள்ளூர் இழுவை மடி மீன்பிடியால் வடக்கு மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் உப தலைவரும் வடக்கு மீனவ பிரதிநிதியுமான நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.**



அவர் தனது இல்லத் தில் நடத்திய ஊடக சந் திப்பிலேயே இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது.

உள்ளூர் இழுவை மடி படகுகளின் மீன்பிடி தொழில் அதிகரித்துள்ளதால் சிறு மீனவர்களின் மீன்பிடி பெரி தும் பாதிக்கப்படுகின்றது. சுமார் 40 வரை பயன்பாட்டி லிருந்த உள்ளூர் இழுவை மடி படகு தற்போது யாழ்ப் பாணத்தில் 600 இற்கு அதிகமாக உள்ளது. இத னால் மீன் உற்பத்தி இடங் கள் அழிக்கப்படுவதால் மீன் பிடி தற்போது வீழ்ச்சியடைந் துள்ளது. இதனால் உள் ளூர் சிறு மீன்பிடியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின் றனர்.

இதனை தடுப்பதற்கு மீன்பிடி அமைச்சோ அல் லது கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகா ரிகளோ நடவடிக்கை எடுப்ப தில்லை. இந்திய இழுவை மடி படகுகளாலும் அதிகள வான பாதிப்புக்கள் தொடர்ந் தும் இடம் பெற்று வருகின் றன.

மீனவர்கள் பிரச்சினை களை எவரும் கண்டு கொள்வதில்லை. டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசா ங்கம் இதுவரை நிவார ணம் எதுவும் வழங்க வில்லை. தடை செய்யப்பட்ட அனைத்து தொழில்முறை களையும் தடை செய்ய வேண்டும்.

மேலும் கடற்படை, பொலிஸார் , சிறப்பு அதிரடி படை ஆகியோராவது மீன வர் பிரச்சினையில் அக்க றை கொண்டு உரிய நடவ டிக்கை எடுக்குமாறும் கோரி க்கை விடுத்தார். (8-60)

# இன்று முதல் புதிய மின் கட்டணம் அமுல்!

(கொழும்பு)

2026ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுக் கான மின்சாரக் கட்டணத் திருத்தத்திற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த புதிய கட்டண முறைமை இன்று திங்கட் கிழமை முதல் அமுலுக்கு வரவுள்ளது.

எரிபொருள் விலை அதி கரிப்பு மற்றும் மின் உற் பத்திக்கான செலவுகள் உய ர்ந்துள்ளதால் ஏற்பட்டுள்ள சுமார் 38 பில்லியன் ரூபாய் வருவாய் இழப்பை ஈடுசெய் யும் வகையில் இந்த நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது. (8)



நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த இரத்தின சபாபதி சுரேஷ் ரஞ்சன் பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி சுபாஷினி ஜெயதிலீபன் முன்னிலையில் சமாதான நீதவானாக கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார். (படம்- மகாலிங்கம்)

# இலங்கை கரையோர பாதுகாப்பு படைக்கு 12 நவீன கண்காணிப்பு ட்ரோன்கள்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் படையின் "ஆப ரேஷன் சாவரின் பார்டர்ஸ்" கூட்டு முகாமை பணிக்குழு வின் தளபதியும், கடல்சார் எல்லைக் கட்டளைத் தளபதியு மான ரியர் அட்மிரல் பிரட் சோன்டர் 12 நவீன கண்காணி ப்பு ட்ரோன்களை இலங்கை கரையோர பாதுகாப்புப் படை பிரிவிடம் உத்தியோகபூர்வ மாகக் கையளித்துள்ளார்.

மிரிஸ்சவிலுள்ள கரை யோர பாதுகாப்புப் படை தலைமையகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை கரையோர பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ரோஹன் ஜோசப் இந்த உபகரணங் களைப் பெற்றுக்கொண்டார்.



கடல்சார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கை களை மேம்படுத்துவதே ட்ரோன் வழங்கப்பட்டமையின் முக்கிய நோக்கமாக சுட்டிகாட்ட ப்பட்டுள்ளது.

கடல்சார் எல்லை முகாமை த்துவத்தில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் வலுவான ஒத்துழைப்பை இது பறை சாற் றுவதாக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். மேலும், எதிர்கால த்தில் இரு நாட்டு பாதுகாப்புப் படைகளுக்கும் இடையில் மேற் கொள்ளப்பட வேண்டிய கூட்டு நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள் ளது. (8)

# போதைப் பொருள்களுடன் 884 பேர் கைது

(கொழும்பு)

"முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் சனிக் கிழமை பொலிஸாரால் முன் னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 884 பேர் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்று 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 893 விசேட சோதனைகள் நடத்தப் பட்டுள்ளன.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்தி ருந்த போதைப் பொருட்களை யும் பொலிஸார் கைப்பற்றியுள்ள னர். (8)

# மோட்டார் சைக்கிள் - பாரவூர்தி விபத்து

(கொழும்பு)

கண்டி - மஹியங்கனை பிரதான வீதியின் உடதும்பர, நிசருவ பகுதியில் நேற்று முற் பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்துள்ளார்.

கண்டியிலிருந்து மஹி யங்கனை நோக்கிப் பயணித்த பாரவூர்தி ஒன்றும், அதற்கு எதிர்திசையில் வந்தமோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் விபத்துக்குள்ளாகி யுள்ளன.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி உடனடியாக உடதும்பர மருத் துவமனையில் அனுமதிக்க நட வடிக்கை எடுக்கப்பட்ட போதி லும், அவர் ஏற்கனவே உயி ரிழந்து விட்டதாக மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித் துள்ளன. இந்த விபத்து தொடர் பில் பாரவூர்தி சாரதி பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை பொலி ஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில் பராபவ வருஷ மகோற்சவம் நேற்றையதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள்-சிவசாந்தன்)

# புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு!

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையைச் சூழவுள்ள வளி மண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழ்வு நிலை காரணமாக, இன்று புதிய காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஒன்று உருவாக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

நாட்டைச் சூழவுள்ள பகுதிகளில் நிலவும் வளி மண்டலத் தளர்வு நிலை காரணமாக, நாடு முழுவதும் தற்போது நிலவும் மழையுடனான வானிலை அடுத்த சில நாட்களுக்குத் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி இன்று இலங்கைக்கு அருகாமையில் ஒரு காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பரப்புகளிலும், வங்கக் கடலின் ஆழமான கடற்பகுதிகளிலும் பலத்த காற்று வீசக்கூடும்.

இதன் காரணமாக இப்பகுதிகளில் கடல் மிகக் கொந்தளிப்பாகக் காணப்படும்.

அடுத்த 168 மணித்தியாலங்களுக்குள் (சுமார் 7 நாட்கள்) இந்தத் தொகுதி ஒரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை தரவுகள் தெரிவிக்கின்றன. (8)

# செயற்பட்டு மகிழ்வோம் போட்டி சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளுக்கிடையேயான ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற குறித்த போட்டியில் தரம்-3 மற்றும் தரம்-4 மாணவர்களுக்கான ஆண்கள் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாண கல்வி வலய சம்பியன் ஆனதுடன் மாகாண மட்டத்திற்கு தெரிவானார்கள்.

அத்துடன் தரம்-5 மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# பயணிகளுக்கு இடையூறு; 4 ஆயிரம் ரூபா தண்டம்!

(மன்னார்)

மன்னார் - முள்ளிக்குளம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து. ஒன்று முன்னறிவித்தலின்றி சேவையில் ஈடுபடாமை மற்றும் பயணிகளுடன் குறித்த பேருந்தின் நடத்துனர் முரண்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக, பேருந்து உரிமையாளருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறித்த தனியார் பேருந்து முன் அறிவிப்பு ஏதுமின்றி தனது சேவையைப் புறக்கணித்தமையால், அந்த வழித்தடத்தைப் பயன்படுத்தும் பொதுமக்கள் எனப் பலரும் வீதியில் காத்திருந்து பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர். அத்துடன், சேவை புறக்கணிப்புத் தொடர்பில் கேள்வியெழுப்பிய பயணிகளுடன் குறித்த பேருந்தின் நடத்துனர் முறையற்ற விதத்தில் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி முரண்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பயணிகளால் அதிகார சபைக்குக் கொண்டுவரப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், போக்குவரத்து அதிகார சபை ஊடாக துரித விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணைகளின் முடிவில், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் விதிமுறைகளை மீறி, பயணிகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் சேவையைத் துஷ்பிரயோகம் செய்தமை ஆகிய குற்றங்களுக்காக குறித்த தனியார் பேருந்துக்கு 4,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. அத்துடன், இனிவரும் காலங்களில் பயணிகள் சேவையின் போது இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டால், குறித்த பேருந்தின் சேவை அனுமதிப்பத்திரம் முற்றாக இரத்துச் செய்யப்படும் எனவும் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (8)

# பனைமரத்துடன் மோதியது மினிபஸ் 9 தொழிலாளர்கள் காயம்



(மன்னார்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் 9 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள கரிசல் பகுதியில் நேற்று காலை மினி பஸ் ஒன்று பயணித்துக் கொண்டிருந்த போது, திடீரென கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த பனை மரம் ஒன்றுடன் பலமாக மோதியுள்ளது.

இந்த விபத்து இடம்பெற்ற போது வாகனத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமைக்காகச் சென்று கொண்டிருந்த தொழிலாளர்களே இருந்துள்ளனர்.

விபத்தில் சிக்கிய 9 பேரும் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மீட்கப்பட்டு, உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பில் தலைமன்னார் மற்றும் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(8-285)

## புதிய நிர்வாகம் தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-வரணி தமிழ்ச் சங்க அங்குரார்ப்பண நிகழ்வும் பொதுக்கூட்டமும் அண்மையில் வரணியில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது ,தலைவராக வரணியூர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன், உப தலைவராக வரணியூர் சி.உதயகுமார்,செயலாளராக வரணியூர் சோ. சி.சிவானந்தராஜா, இணைச் செயலாளராக வரணியூர் திருமதி. ஜெசிந்தா இராகவன், பொருளாளராக வரணியூர் இ.சுப்பிர மணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8-30)

# 9 நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையினால், 9 பாரிய நீர்த்தேக்கங்கள் மற்றும் 5 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்கள் தற்போது வான் பாய்ந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

லுணுகம்வெஹெர, வெஹெரகல, இராஜாங்கனை மற்றும் தெதுறு ஓயா ஆகிய முக்கிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

குறித்த நீர்த்தேக்கங்களின் கீழ்மட்டப் பகுதிகளில் வசிக்கும் மக்களும், ஆறுகளின் இருமருங்கிலும் உள்ள மக்களும் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மழையின் அளவு அதிகரிக்கும் பட்சத்தில், வெளியேற்றப்படும் நீரின் அளவு எந்த நேரத்திலும் அதிகரிக்கப்படலாம் என்பதால், இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்புகளைத் தொடர்ந்து அவதானிக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (8)

# மண்சரிவு அபாயம்!

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளுக்கு முதலாம் நிலை மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உப்புக்கேணி குளத்திற்கு

# பாதுகாப்பு வேலி அமையுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

**சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு தரை வட்டாரத்தில் அமைந்துள்ள உப்புக்கேணிக் குளத்திற்கான பாதுகாப்பு வேலி அமைக்கும் விடயத்தில் உரிய திணைக்களங்கள் தொடர்ந்தும் அசமந்த போக்கினை காட்டிவருவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**



மேற்படி குளமானது வருடக்கணக்கில் பராமரிப்பு எதுவும் இன்றிக் காணப்பட்ட நிலையில் சாவகச்சேரி நகரசபையானது கடந்த மாரி காலத்திற்கு முன்னர் குளத்தினை தூர்வாரி ஆழப்படுத்தி கொள்ளளவை அதிகரித்திருந்தது.

நகரசபையின் முயற்சியால் கடந்த மாரி மழையின் போது அப்பகுதியில் பாரிய வெள்ள இடர் ஏற்படாமல் குளம் வெள்ள நீரினை உள்வாங்கியிருந்தது.

நகரசபையானது குளத்தினை ஆழப்படுத்தி ஒருவருட காலத்தை அண்மிக்கின்ற போதிலும் இதுவரை குளத்திற்கான பாதுகாப்பு வேலியை அமைக்காமல் இழுத்தடித்து வருவதால் பொதுமக்கள் மற்றும் கால்நடைகள் அபாய நிலைமையிலேயே உப்புக்கேணி வீதி ஊடாக பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

உப்புக்கேணி குளமானது உப்புக் கேணி பிரதான பாதையோடு அமைந்துள்ளது.

அத்துடன் வீதியின் ஒருபகுதி நீர் வரத்து காரணமாக அரிக்கப்பட்டு மாரி காலத்தில் குளம் எது-வீதி எதுவென்று அடையாளம் காண முடியாத அளவிற்கு அபாய நிலையில் காணப்படும்.

எனவே மாரி காலத்தில் இவ்வாறான அசம்பாவிதங்களை தவிர்க்கும் முகமாக உரிய திணைக்களங்கள் குளத்திற்கான இருபக்க பாதுகாப்பு வேலி அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-30)

# தெனியாய பகுதியில் காய்ச்சல் பரவல் தீவிரம் மேலும் 2 நாட்களுக்கு மூடப்படும் பாடசாலைகள்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களிடையே வேகமாகப் பரவி வரும் காய்ச்சல் நிலைமை காரணமாக, ஏற்கனவே தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தெனியாய கல்வி வலயத்திற்குட்பட்ட நான்கு பாடசாலைகளைத் தொடர்ந்தும் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைக்கமைய, நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெனியாய வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அதன்படி, தெனியாய மத்திய கல்லூரி, தெனியாய ராஜபக்ஷ மகா வித்தியாலயம், தெனியாய புனித மத்தியூஸ் இருமொழிப் பாடசாலை, பல்லேகம சித்தார்த்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் இன்று மற்றும் நாளை ஆகிய இரு தினங்களிலும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களிடையே வேகமாகப் பரவி வரும் காய்ச்சல் நிலைமையைக் கருத்திற் கொண்டு, கடந்த 7 ஆம் திகதி முதல் குறித்த பாடசாலைகள் தற்காலிகமாக் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# பேருந்துக்கு முன்னால் சரிந்து விழுந்தது மரம்

## மயிரிழையில் உயிர் தப்பிய பயணிகள்

(கொழும்பு)


கடும் மழை காரணமாக மட்டக்களப்பிலிருந்து பிபிலை ஊடாக ஹட்டன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்றிற்கு முன்னால், பசறை பகுதியில் பெரிய மரம் ஒன்று சரிந்து விழுந்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மரம் வீதியில் சரிந்து விழுந்த போதிலும், பேருந்து சாரதியின் துரித செயற்பாட்டினால் பேருந்து உடனடியாக நிறுத்தப்பட்டது. இதனால் ஏற்படவிருந்த பாரிய விபத்து தவிர்க்கப்பட்டதுடன், பேருந்திலிருந்த பயணிகள் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (8)

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை ஞானேந்திரன்



தோற்றம் 15.09.1941 மறைவு 08.05.2026

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், ஈவினை மத்தி புன்னாலைக்கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை ஞானேந்திரன் அவர்கள் 08.05.2026 வெள்ளிக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-வீரலட்சுமி அம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மனோன்மணி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான துரையப்பா- அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஞானலோசினியின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற யோகராணியின் மைத்துனரும், நித்தியசோதி, கதிர்காமரஞ்சன், ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவகுரு, சிவநாயகி, நிர்மலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தனுசா, ராயவர்மன், கஜன், லக்ஷனா, சந்தியா, சதுர்ஷன், றம்மியா, சஹானா ஆகியோரின் பாசமிகு பேரனாரும், இனியனின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.05.2026 இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஈவினை இந்து' மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன். (7587)

தகவல்:- குடும்பத்தினர்.
077 899 9740

## அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை - நல்லூர் உப அலுவலகம், திருநெல்வேலி

## ஆதனப் பெயர்மாற்றம்

**ஆதன இல - 60/09 கலைமகள் வீதி, வட்டாரம் 03**

ஆதன இல 60/09 கலைமகள் வீதி, வட்டாரம் 03 இல் அமைந்துள்ள ஆதனமானது நல்லூர் பிரதேசசபையின் நல்லூர் உப அலுவலகத்தில் பேணப்படும் ஆதனவரி பதிவேட்டின் பிரகாரம் S.மாசிலாமணி, S.சபாரட்ணம் சொந்தக்காரர் உ/கோ S.சபாரட்ணம் என்பவரது பெயரில் காணப்படுகின்றது.

இவ் ஆதனம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் இறை "கானீக்குட்டி வளவும் கும்பா வயலும்" நி.ப (1) ஒன்று குளி (09) அளவுடையது. இது 2009ஆம் ஆண்டு பங்குனி மாதம் 6ஆம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு.ந.கேதீஸ்வரன் அவர்களினால் வரையப்பட்ட 1047 இலக்கப்படத்தில் துண்டு 1 என்னும் எண்ணினால் சுட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு 1 குளி 09 இற்கும் எல்லை **கிழக்கு** - ஒழுங்கை, **வடக்கு** - சிவக்கொழுந்து மாசிலாமணியின் ஆதனம், **மேற்கு** - பாதை, **தெற்கு** - ஒழுங்கை இதடங்கலும் (நன்கொடை ஏற்பவரின் பங்கு உட்பட) என காணப்படுகின்றது.

குறித்த ஆதனம் சிவக்கொழுந்து சபாரட்ணம் என்பவரிற்கு சொந்தமாக இருந்தது என்றும் பின்னர் சபாரட்ணம் கைம்பெண் அன்னம்மாவினாலும் பிள்ளைகளான சபாரட்ணம் ஜெயசீலன், சபாரட்ணம் ரகுசீலன் ஆகியோரால் முதலாம் பெயரின் கணவனும் 2ஆம் , 3ஆம் பெயரினதும் நன்கொடை ஏற்பவரினதும் பிதாவுமாயிருந்த காலம்சென்ற சிவக்கொழுந்து என்பவரின் சொந்தமாக இருந்து (அவர் இறப்பின்) வந்தடைந்த பிதாவழி முதுசமும் நெடுங்கால தடையற்ற ஆட்சியுடையது என்று வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 10945ஆம் இலக்க 30.05.2009 திகதிய நன்கொடை உறுதி மூலம் சபாரட்ணம் தயசீலன் என்பவரிற்கு நன்கொடையளித்துள்ளனர். தற்போது மேற்படி விண்ணப்பத்தாரியான சபாரட்ணம் தயசீலன் அவர்கள் ஆதனவரிப்பதிவேட்டில் வரியிறுப்பாளராக தனது பெயரினை உட்புகுத்துமாறு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் பத்திரிகையில் விளம்பரம் செய்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தமது ஆட்சேபனையை எழுத்து மூலம் முறைப்பாடாக அதற்கு ஆதாரமான சட்டரீதியான ஆவணங்களை இணைத்து நேரடியாகவோ அல்லது தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, இல. 14/05 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் முறைப்பாட்டாளர் வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினரூடாக ஆட்சேபனை சமர்ப்பிக்க முடியும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

சட்டரீதியான ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படாத அனைத்து முறைப்பாடுகளையும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேச சபைக்கு உண்டு என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

அவ்வாறு எவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆட்சேபனைகள் தெரிவிக்காதவிடத்து குறித்த ஆதனமானது சபாரட்ணம் தயசீலன் என்ற பெயரில் பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இப் பெயர்மாற்றத்தால் எழக்கூடிய எந்த வகையான விளைவுகளையும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பேற்றுக்கொள்ளாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

(C-5606)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## பாரதம்

# தமிழக முதலமைச்சராக விஜய் பதவியேற்பு




## இஸ்ரேல் அரசாங்கத்துக்கு எதிராக

# வெடித்தது பாரிய போராட்டம்



(ஜெருசலேம்)

லெபனான் மீதான தொடர் தாக்குதல்கள் மற்றும் ஈரானுடனான போர்ச் சூழலுக்கு மத்தியில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகக் கோரி டெல் அவிவ் நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஈரான் மற்றும் லெபனான் மீதான போர் நடவடிக்கைகளுக்கு ஒரு புறம் எதிர்ப்புகள் கிளம்பியுள்ள நிலையில், மறுபுறம் இஸ்ரேலிய இராணுவத்தில் இணைய மறுக்கும் அதி-தீவிர பழமைவாத சமூகத்தினரால் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் பதற்றமும் இந்தப் போராட்டத்திற்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போராட்டத்தின் போது போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்த பதாதைகளில் இஸ்ரேலிய அரசாங்கத்தைக் கடுமையாகச் சாடும் வாசகங்கள் இடம்பெற்றிருந்தன.

குறிப்பாக, “இனப்படுகொலையை நிறுத்து”, “அக்டோபர் ஏழை மறந்துவிடு" போன்ற வாசகங்களுடன், பிரதமர் நெதன்யாகுவை முன்னாள் கொலம்பிய போதைப்பொருள் கடத்தல் மன்னன் பாப்லோ எஸ்கோபாருடன் ஒப்பிட்டு “பிபி எஸ்கோபார்” எனச் சாடி போராட்டக்காரர்கள் முழக்கமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலில் நிலவும் இந்தப் போர்க்கால நெருக்கடிகளுக்கு மத்தியில், இந்த ஆண்டின் பிற்பகுதியில் அங்கு பொதுத் தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சூழலில் நெதன்யாகுவுக்கு எதிராகத் திரண்டுள்ள மக்கள் அலை, சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. (3)

## சொந்த மண்ணி

# போர் மூ
# 34 ஆயிர



(புனோம் பென்)

கம்போடியா மற்றும் தாய்லாந்து நாடுகளுக்கு இடையே நிலவி வரும் எல்லைப் போர் காரணமாக, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தற்காலிகப் போர் நிறுத்தம் அமுலில் இருந்தபோதிலும், எல்லையில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக மக்கள் தங்களின் வீடுகளுக்குத் திரும்ப முடியாத நிலை நீடிக்கிறது.

கம்போடிய உள்விவகார அமைச்சகத்தின் தரவுகளின்படி, இந்த மாதம் வரை சுமார் 34,440

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எண்ணெய்க் கப்பல்கள் தாக்கப்பட்டால் அமெரிக்க தளங்கள் எமது இலக்காகும்!

## ஈரான் கடும் எச்சரிக்கை



(டெஹ்ரான்)

**ஈரானிய எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் மீது ஏதேனும் தாக்குதல் நடத்தப்பட்டால், பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மற்றும் கடற்படைக் கப்பல்கள் மீது பாரிய தாக்குதல் நடத்தப்படும் என ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை கடற்படைத் தலைமையகம் எச்சரித்துள்ளது.**

ஈரானின் அரசு நடத்தும் "ஐரிப்" செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

"ஈரானியக் கப்பல்கள் மீதான எந்தவொரு தாக்குதலுக்கும், அமெரிக்கத் தளங்கள் மற்றும் எதிரிக் கப்பல்கள் மீதான பரந்த அளவிலான தாக்குதலே பதிலாக அமையும்" என்று புரட்சிக்கர கடற்படை கட்டளையகம் தெரிவித்துள்ளது.

ஹார்முஸ் நீரிணைப் பகுதியில் ஈரானிய மற்றும் அமெரிக்கப் படைகளுக்கு இடையே அவ்வப்போது சிறிய அளவிலான மோதல்கள் மற்றும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் நிகழ்ந்து வருவதால் குறித்த பகுதியில் கடும் பதற்றம் நிலவுகிறது.

எனினும், இந்த மோதல்களுக்கு மத்தியிலும், அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் இன்னும் அமுலில் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் மற்றும் ஈரானின் இந்த பதிலடி எச்சரிக்கைகள் காரணமாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. (3)

---

### ...லேயே அகதிகளான அவலம்

# ...னையில் தவிக்கும் ...ம் கம்போடியர்கள்



பேர் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் தங்கி வருகின்றனர். இதில் 11,355 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு ஜூலை மற்றும் டிசம்பர் மாதங்களில் இரு முறை வெடித்த இந்த மோதலில், இரு தரப்பிலும் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

மேலும், தாய்லாந்து நடத்திய வான்வழித் தாக்குதல்கள் காரணமாகப் பல கிராமங்கள் உருக்குலைந்துள்ளன.

"போர் மீண்டும் தொடங்கும்" என்ற வதந்திகளால் சிறுவர்கள் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எல்லையில் உள்ள பல கிராமங்களைத் தாய்லாந்து இராணுவம் "முள்வேலிகள் மற்றும் பெரிய கொள்கலன்கள் மூலம் மறித்து ஆக்கிரமித்துள்ளது.

"அமைதிக்கு நன்றி" என்ற வாசகங்கள் எங்கும் நிறைந்திருந்தாலும், எல்லையில் இன்னும் துப்பாக்கிச் சத்தங்கள் அவ்வப்போது கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றன என உள்ளூர் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (3)

---

# அமெரிக்காவுடனான போருக்கு மத்தியில் வலுவடைந்த சீனா-ஈரான் உறவுகள்



(டெஹ்ரான்)

மத்திய கிழக்கில் நிலவி வரும் அமெரிக்காவுடனான போருக்குப் பிறகு ஈரான் மற்றும் சீனா இடையேயான இருதரப்பு உறவுகள் மேலும் விரிவானதாக சீனாவுக்கான ஈரான் தூதர் அப்துல்ரெஸா ரஹ்மானி தெரிவித்துள்ளார்.

இதன்படி இந்த உறவுகள் ஆழமானதாகவும், பன்முகத்தன்மை கொண்டதாகவும் மாறும் என்று கூறியதுடன், கடினமான காலங்களில் ஈரானுக்குத் துணையாக நின்றதற்காக சீனாவை அவர் பாராட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் உரையாற்றிய அவர்,

"சீனர்கள் கடினமான காலங்களில் ஈரானின் நண்பர்களாக இருந்து, இக்கட்டான சூழ்நிலைகளில் எங்களுக்கு உதவி செய்தார்கள். எங்கள் மக்களுக்குத் துணையாக சீனர்கள் நின்றனர்.

நாங்களும் எங்கள் கடினமான கால நண்பர்களை மறக்க மாட்டோம். சீனா ஈரானின் மூலோபாய பங்காளி மற்றும் நெருங்கிய நண்பர்.

இந்நிலையில் தற்போதைய மோதல் முடிவுக்கு வந்தவுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுப்பெறும்" என்றார்.

அமெரிக்கா தலைமையிலான கடற்படை முற்றுகை உட்பட, ஈரான் மீது அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், தூதரின் இந்தக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம்!

(கொழும்பு)

**அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஈரான் மீது மேற்கொண்டுள்ள போர் காரணமாக, வளைகுடா நாடுகளின் எண்ணெய் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, உலகளாவிய எண்ணெய் கையிருப்பு முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் குறைந்து வருவதாக புளூம்பெர்க் அறிக்கை எச்சரித்துள்ளது.**

மோர்கன் ஸ்டான்லி மதிப்பீட்டின்படி, கடந்த மார்ச் 1 முதல் ஏப்ரல் 25 வரையிலான குறுகிய காலப்பகுதிக்குள் உலகளாவிய எண்ணெய் இருப்பு சுமார் 270 மில்லியன் பீப்பாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த பெப்ரவரி 28 அன்று மோதல் தொடங்கியதிலிருந்து, இதுவரை ஒரு பில்லியன் பீப்பாய்களுக்கும் அதிகமான எண்ணெய் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

எண்ணெய் விநியோகத்தில் ஏற்படும் இவ்வாறான பாரிய அதிர்ச்சிகளைத் தாங்கும் திறனை உலக நாடுகளும் தொழிற்சாலைகளும் இழந்து வருவதாகக் கூறப்படுகிறது.

கையிருப்பு வேகமாகத் தீர்ந்து வருவதால், எதிர்காலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு ஏற்பட வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது.

வளைகுடா பிராந்தியத்தில் நிலவும் போர்ப் பதற்றங்கள் கடல்சார் போக்குவரத்து மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் செயற்பாடுகளை முடக்கியுள்ளதே இந்த நெருக்கடிக்கு முதன்மைக் காரணமாகப் பார்க்கப்படுகிறது. (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 35<br>8 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc, MSc, London<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16884 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>தகைமை/தொழில்: College, English Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16880 |
| பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Machanical Engineer<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/16885 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>7 இல் செவ்<br>கி.பா: 49<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBM, BEd, MEd, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16882 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>8இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BBM, MBA, Banker<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16888 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc, MSc, London<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16883 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 28 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: NDT, BSc, Teacher<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16890 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>1 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA, MA<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16886 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc, PHD, Lecturer (Aus)<br>எதிர்பார்ப்பு: உயர்கல்வி<br>தொ.இ: B/16891 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>4 இல் சூரி செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு : வெளிநாடு<br>தொ.இ: G/16887 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 592



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஞானியர் நிலை!

ஒரு குரு இருந்தார்! ஜென் குரு!

அவரிடம் ஒரு பழக்கம். வேறு என்ன.. அப்பப்ப கொஞ்சம் திருடுவார். அவ்வளவு தான்! பெரிதாக ஒன்றும் திருட மாட்டார்.! அவர் ஈடுபடுவது எல்லாம் சின்னச் சின்ன திருட்டு தான்!

அடுத்தவர்களுக்குச் சொந்தமான சின்னச் சின்னப் பொருட்களை திருட வேண்டியது - மாட்டிக்க வேண்டியது சிறைக்குப் போக வேண்டியது விடுதலையானதற்குப் பின்பு மறுபடியும் திருட்டு.. இதுவே பழக்கமாகப் போய்விட்டது அவருக்கு!

அவருடைய சீடர்களுக்கு இது ஒரு பெரிய புதிர். நமது குரு ஒரு பெரிய ஞானி. அவர் இப்படி செய்கின்றாரே என்று நினைக்கின்ற போது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஏன் இப்படி செய்கிறார் என்று ஒன்றும் புரியவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். ஒரு நாள் கேட்டே விட்டார்கள்.

"ஏன் சுவாமி இப்படி செய்கின்றீர்கள்? செருப்பைக் கூட திருட வேண்டுமா நீங்கள்? உங்களுக்கு என்ன தேவை என்பதை எங்களிடம் சொன்னால் ஒரு செருப்பு கடையை வாங்கி வந்து குவித்து விட மாட்டோமா? ஏன் இப்படி செய்கின்றீர்கள்? என்ன ஆகி விட்டது உங்களுக்கு?" அப்படி என்று கேட்டார்கள்.

அதற்கும் ஒரு சிரிப்புத் தான்! சிரித்துக் கொண்டே பேசாமல் போய் விட்டார் குரு!

அதற்குப் பின்பு அவர் வழக்கத்தை நிறுத்தவில்லை. திருடுவது - மாட்டிக் கொள்ளுவது - ஜெயிலுக்குப் போறது! சீடர்கள் கேட்டால் சிரித்துக் கொண்டே போய் விடுவது! இப்படி அவருடைய காலம் ஓடிப் போய் விட்டது! கடைசியிலே ஒரு நாள் அவர் மரணப் படுக்கையிலே கிடக்கின்றார். பக்கத்திலே அவர் சீடர்கள் எல்லாம் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்!

இப்போதாவது நமது குரு உண்மையைச் சொல்ல மாட்டாரா? அப்படி என்று நினைத்துக் கொண்டு அந்தப் பழைய கேள்வியையே திரும்பவும் கேட்டார்கள்.

"சுவாமி! இப்போதாவது சொல்லுங்களேன்! நீங்கள் அடிக்கடி திருடிக் கொண்டு ஏன் ஜெயிலுக்குப் போகின்றீர்கள்! அந்த செயலுக்கு என்ன காரணம்? அதில் உள்ள மர்மம் என்ன?" - அப்படி என்று கேட்டார்கள்.

"அதில் பெரிய இரகசியம் ஒன்றும் இல்லை. சாதாரண விடயம் தான்!" அப்படி என்றார் குரு.

இவர்களுக்கு இன்னமும் ஆச்சரியம்! "என்னது.. சாதாரண விடயமா...?" அப்படி நினைத்து குழம்பிப் போய் நின்றார்கள்.

இப்போது அந்த குரு சொல்கிறார்.

"வேறு ஒன்றுமில்லையப்பா... நான் அடிக்கடி சிறைக்குள்ளே போக வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். அதனாலே தான் திருடினேன். உள்ளே இருக்கின்றவர்களை சந்தித்துப் பேசி. அவர்களுக்கு நல்ல வழி காட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதற்கு இதை விட சிறந்த வழி வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லை! அதனாலே தான் சின்னச் சின்ன திருட்டுகள் செய்தேன். என்னுடைய பயம் எல்லாம் என்னவென்றால் "எங்கே மாட்டிக்கொள்ளாமல் போய் விடுவோமோ?" என்பது தான்! மாட்டிக்கொண்டால் தானே உள்ளே போக முடியும்! எனக்குத் தண்டனை கொடுக்கின்ற நீதிபதியும் ரொம்ப நல்லவர்...ஒவ்வொரு தடவையும் ஆறு மாதத்துக்குக் குறையாமல் தண்டனை கொடுத்து விடுவார். உள்ளே எனக்கு ஒரே சந்தோஷம் தான். நிறைய பேர் திருந்தி வெளியே வருவதற்கு நான் உதவி செய்திருக்கின்றேன்!" அப்படி என்றார்.

உண்மையான ஞானிக்கு அரண்மனையும் ஒன்று தான் சிறைச்சாலையும் ஒன்று தான் அப்படி என்பதை தன்னுடைய வாழ்க்கை மூலமாக நிரூபித்துக் காட்டினவர் அந்தக் குரு!

நம்ம ஆளு ஒருத்தன்.

"அவனும் கொஞ்சம் வித்தியாசமான ஆள் தான்! அடிக்கடி திருடுவான் - மாட்டிக்கொள்ளுவான் - ஜெயிலுக்குப் போவான் என்னப்பா இப்படி செய்கிறாயே என்று கேட்டேன் "

"ஜெயில் என்பது எனக்கு மாமனார் வீடு மாதிரி சார்" அப்படி என்று சொல்லுவான்.

நிஜமாகவா அப்படிச் சொல்லுகிறாய் என்று கேட்டால், ஆமாம் சார்... என்னுடைய மாமனாரும் அங்கே தான் ஆயுள் தண்டனை கைதியாக இருக்கிறார்!" அப்படி என்றான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்துங்கள்!

## விவசாயிகள் கோரிக்கை

(தருமபுரம்)

**நெத்தலியாற்றுப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்து மாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள் ளனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் நெத்தலியாற்றுப்பகுதியில் கடந்த 15 வருட காலமாக இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ் வினைத் தடுக்க முடியாத நிலை காண ப்படுகின்றது.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாறு பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் ஆற்றுப்பகுதிக்கு அருகில் விவசாய நிலங்கள், ஆற்றுப் படுக்கைகள், அரச காடுகள் மற்றும் பறவைகள் சரணாலயம் போன்ற பகுதி களில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின் றனர்.

இதன் காரணமாக அப்பகுதிகளில் வாழும் விவசாயிகளின் வயல் நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வனவிலங்குகளும் பாதிப்பு க்கு உள்ளாகி வருகின்றன.

எனவே உரிய அதிகாரிகளை சட்ட விரோத மணல் அகழ்வைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்குமாறு விவ சாயிகள் கோரிக்கை விடுத்துள்ள னர். (8-316)



## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 250 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 150 | -- | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 100 | 120 | 200 |
| தக்காளி | 450 | 450 | 250 | 180 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 150 | 200 |
| கோவா | 300 | 180 | 150 | 130 | 200 |
| கரட் | 300 | 350 | 400 | 280 | 400 |
| பூசணி | 80 | 100 | 100 | 80 | 150 |
| புடோல் | 200 | 180 | 150 | 150 | 300 |
| வாழைக்காய் | 150 | 80 | 100 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-300 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 280 | 280 | 180 | -- | 320 |
| பாகற்காய் | 800 | 600 | 600 | 500 | 800 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 300 | 500 |
| பயற்றங்காய் | 500 | 300 | 250 | 320 | 250 |
| லீக்ஸ் | 300 | 280 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 280 | 200 | 150 | 150 | 320 |
| கறிமிளகாய் | 250 | 150 | 200 | 150 | 320 |
| முருங்கைக்காய் | 1300 | 1200 | 800 | 1000 | 1000 |
| போஞ்சி | 650 | 650 | 800 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 150 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 100 | 60-120 | 150 | 90 | 150 |
| தேசிக்காய் | 300 | 550 | 600 | 550 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 140 | 150 | 150 | 120 | 100-140 |
| இராசவள்ளி | 350 | 600 | 400 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 800 | 650 | 1000 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 90 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 150 | -- | 80 |
| வல்லாரை | 80 | 70 | 100 | -- | 80 |
| ஈரப்பலா | -- | -- | 200 | -- | -- |

# கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட சிறுவர்கள் உயிருடன் மீட்பு

(கொழும்பு)

கொழும்புத்துறைமுக நகரில் கடலலையில் அடித்துச் செல்லப்பட்ட இரு சிறுவர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு துறைமுக நகரம் கடற்பகுதியில் நீராடச் சென்ற 16 வயதுடைய கொழும்பு பகுதியைச் சேர்ந்த மூன்று சிறுவர்களில் இருவர் கடல் அலையில் அடித்துச் செல்லப் பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அகில் மற்றும் அஹமட் என அடையாளம் காணப்பட்ட அந்த இரு சிறுவர்களும் கட லில் சிக்கிய நிலையில், 'அப் பகுதியில் கரையோர காவலர் சேவையில் ஈடுபட்டிருந்த காவ லர்கள் தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல் கடலுக்குள் சென்று வீரத்துடன் இருவரை யும் உயிருடன் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுவர்களுக்கு உடனடியாக PCR முதலுதவி வழங்கப்பட்டதுடன், பின்னர் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (8)

# இராசிபலன்

11.05.2026
சித்திரை 28, திங்கட்கிழமை
நவமி முற்பகல் 11.01 மணிவரை

சதயம் முன்னிரவு 9.27 மணிவரை
சுப நேரம் 11.34-1.24 மணிவரை
இராகுகாலம் 7.24-8.54 மணிவரை
திருநாவுக்கரசர் குருபூசை

சந்திராஷ்டமம்:ஆயிலியம், மகம்

**வளவன்**



மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



கடகம்

உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்..



துலாம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, எளிதில் நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தாய்வழி உறவில் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.



மகரம்

சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.



ரிஷபம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.



சிம்மம்

சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, கடன் பிரச்சினைகளைச் சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.



விருச்சிகம்

பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.



கும்பம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், உடல் நலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.



மிதுனம்

உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது.



கன்னி

கூட்டு முயற்சிகள் வெற்றி பெறும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு உயரும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.



தனுசு

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



மீனம்

உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**நிகழ்காலத்தை நாம் இழப்பதால் எதிர்காலத்தையும் இழக்கிறோம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1041





யிலும் அடிபட்டு எங்கேயா வது சமீபத்தில் ஒதுங்கி இருக் கிறாயா என்று சுற்றுப்புற மெல்லாம் தேடி அலைந் தேன். கொள்ளிடத்து உடைப்புக்கு அருகில் ஒரு சிறிய கோவில் இருக்கிறது. அதில் யாரோ படுத்திருப் பதுபோலத் தோன்றியது. ஒரு வேளை நீதான் அசந்து தூங்குகிறாயோ என்று அரு கில் போய்ப் பார்த்தேன் யாரைப் பார்த்தேன் என்று நினைக்கிறாய்? சாக்ஷாத் பெரிய பழுவேட்டரைய னைத்தான்!"

இவனுக்கு என்ன இந்த விடயத்தில் கவலை? ஆம் ஆம் இருபது வருடங்க ளுக்கு முன்னால் 'சோழ குலத்தையே அழித்துவிடப் போகிறேன்' என்று சபதம் செய்துவிட்டுப் போனவன் அல்லவா இவன்? ஆகா! தம்மைப் பற்றித்தான் அவன் ஏதோ பேசுகிறான்! என்ன சொல்லுகிறான் என்று கேட்கலாம்!

"நீ என்னிடம் சொல்லியி ருந்தபடி இன்று காலையே இங்கு நான் வந்தேன். ஆனால் உன்னைக் காண வில்லை. காற்றிலும் மழை

மந்திரவாதி, 'ஹாஹாஹா' என்று உரத்துச் சிரித்தான். அதைக் கேட்ட வனத்தில் வாழும் பறவைகள் 'கீறீச்' 'கீறீச்' என்று சத்தமிட்டன. ஊமைக் கோட்டான்கள் உறுமின.

"பழுவேட்டரையனைப் பார்த்தாயா? அல்லது அவ னுடைய பிசாசைப் பார்த் தாயா?" என்று ரவிதாஸன் கேட்டான்.

"இல்லை பிசாசு இல்லை. குப்புறப்படுத்திருந்தவனைத் தொட்டுப் புரட்டிப் போட்டு முகத்தை நன்றாக உற்றுப் பார்த்தேன். ரவிதாஸா! யம னுக்கு அண்ணன்கள் இர ண்டு பேர் இருக்கமுடியுமா? பழுவேட்டரையனைப் போலவே, அதே முகம், அதே மீசை, அதே காய வடுக்கள், இவற்றுடன் மனிதன் இருக்க முடியுமா?"

"நீ பார்த்தவன் பழுவேட் டரையன்தான்! சந்தேகமி ல்லை. நேற்று மாலை பழு வேட்டரையன் படகில் ஏறிக் கொள்ளிடத்தைத் தாண்டிக் கொண்டிருந்தான். கரையருகில் வந்தபோது படகு காற்றினால் கவிழ்ந் துவிட்டது. அவனுடைய பரிவாரங்களில் தப்பிப் பிழைத்துக் கரையேறியவர் கள் இப்போதுகூடக் கொள் ளிடக் கரையோரமாகப் பழு வேட்டரையனைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவன் வெள்ளத்தில் மூழ்கி இறந்து போயிருக் கலாம் என்று சந்தேகப் படுகிறார்கள். உடைப்பு வரையில் போய்ப் பார்த்து விட்டு அவர்கள் திரும்பி வரும் போது பேசியதை நான் கேட்டேன். ஆகை யால், நீ பார்த்தவன் பழுவேட்டரையனாகவே இருக்கக்கூடும். ஒரு வேளை அவனுடைய பிரேதத் தைப் பார்த்தாயோ, என்னமோ!"

"இல்லை, இல்லை. செத் துப்போயிருந்தால் கண் விழிகள் தெரியுமா? நான் புரட்டிப் பார்த்தவனுடைய கண்கள் நன்றாக மூடியிருந் தன. களைத்துப்போய்த் தூங்கிக் கொண்டிருந்தான் போலிருக்கிறது?"

"முட்டாளே! நீ என்ன செய்தாய்! அவனைச் சும்மா விட்டு விட்டு வந்தாயா? தலையிலே ஒரு கல்லைத் தூக்கிப் போட்டிருக்கக் கூடாதா?"

"பழுவேட்டரையன் தலை யைப் பற்றி உனக்குத் தெரி யாது. அவன் தலையிலே கல்லைப் போட்டால், கல் தான் உடைந்து தூள் தூளா கும்!"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்பு மணியின் அப்பா



(நேற்றைய தொடர்ச்சி..)

"அன்பு, என்னப்பா யோசிக்கிறாய்?" என்று கேட்டார் மகாதேவர். "ஒன்றும் இல்லையப்பா!" என்று மழுப்பினான் அன்புமணி.

"தயங்காதே, சொல். ஏதாவது வேண்டுமா?" என்று கேட்டார் அவர்.

அன்புமணி சிறிது நேரம் பேசாமலிருந்தான். பிறகு, "அப்பா, ஆண்டு தோறும் தீபாவளிக்கு முந்தைய நாள் ஏழைக் குழந்தைகளுக்குப் பட்டாசு வாங்கித் தருகி றீர்களே! இதற்கு ஏதாவது காரணம் இருக்குமா என்று யோசித்தேன்" என்றான். "காரணம் இருக்கிறது" என்று பதிலளித்தார் மகா தேவர். "அதை நான் அறிந்து கொள்ளலாமா அப்பா?" என்று ஆவலோடு கேட்டான் அன்புமணி.

"அதை நிச்சயம் அறிந்து கொள்ளத்தான் வேண்டும், கேள்" என்று கூறிவிட்டு மேலே சொல்ல ஆரம்பித் தார்:

"அன்பு, அப்போது நான் உன்னைப்போல இருப் பேன். பழையவூர் கிராமத் தில் படித்துக் கொண்டி ருந்தேன். அந்த ஊரிலுள்ள பள்ளியில் படிக்கச் சுற்றுப் புறத்திலிருந்தெல்லாம் மாணவர்கள் வருவார்கள். அப்போது நான் ஏழைச் சிறுவன். அப்பாவை இழ ந்து அம்மாவின் ஆதரவில் வளர்ந்தவன். அம்மா எங் கெங்கோ வேலை செய்து என்னைக் காப்பாற்றி வந்தாள்.

பழையவூருக்கு நான்கு மைல் தூரத்தில் புதுவூர் இருந்தது. அது கிராம மல்ல, நகரம். அங்குதான் என் மாமா-அம்மாவின் தம்பி-தர்மலிங்கம் வசி த்து வந்தார். அவர் பெரிய பணக்காரர். அவர் உதவி யிருந்ததால் தான் நான் படித்தேன்.

வருடத்தில் பல விழாக் கள், பண்டிகைகள் வருகி ன்றன. அவற்றையெல் லாம் கிராமத்தினர் விம ர்சையாகக் கொண்டாடு வார்கள். ஆனால், எங்கள் வீட்டில் மட்டும் எப் போதும் துக்கம்தான்! நான் மற்றவர்களை வேடிக்கை பார்ப்பேன். அவர்களைப் போல் நம்மால் இருக்க முடியவில்லையே என்று வேதனைப்படுவேன்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

~ திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்ட தீக்கான காரணத்தைக் கண்டறிக!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியம் தீயில் எரிந்த சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு சத்திரசிகிச்சைக்கான மருந்துக் களஞ்சியம் தீக்கிரையாகியதில் பல கோடி ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் எரிந்து நாசமாகியதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

குறித்த மருந்துக் களஞ்சியத்தில் தீ பரவியதற்கான காரணம் மின் ஒழுக்காக இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

அதேநேரம், யாழ். போதனா வைத்தியசாலையின் மருந்துக்களஞ்சியத்தில் தீ பரவியது தொடர்பில் முரண்பட்ட கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகிய வண்ணமுள்ளன.

எது எவ்வாறாயினும் ஒரு சம்பவம் அல்லது விபத்து நடந்துவிட்டால் அது தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும்.

ஏனெனில் உண்மைக் காரணங்கள் மட்டுமே உண்மையானவை. தவிர, வேண்டுமென்றே புனைகின்ற காரண காரியங்கள் அல்லது ஊகத்தின் அடிப்படையில் கூறப்படுகின்ற விடயங்கள் உண்மைகளைக் கண்டறிவதற்குத் தடையாக இருப்பதுடன் அதனால் யாழ். போதனா வைத்தியசாலைச் சமூகத்திற்கும் கடும் மன உளைச்சல் ஏற்படும்.

எனவே யாழ். போதனா வைத்தியசாலை மருந்துக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்துக் குறித்து துறைசார் நிபுணர்கள் அடங்கிய குழு விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகளைக் கண்டறிவது கட்டாயம்.

அதேநேரம் மின் ஒழுக்குக் காரணமாக ஒரு மருந்துக் களஞ்சியம் எரிந்து சாம்பலாகுவதென்பது எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

அதாவது, மின் ஒழுக்கு ஏற்படாதவாறு மின் இணைப்புகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பொருத்தப்பட்ட மின் இணைப்புகள் தொடர்பில் உரிய தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அதனை ஆய்வு செய்து மின் ஒழுக்கு ஏற்படமாட்டாது என்பதை உறுதி செய்வது அவசியம்.

இவையெல்லாம் இடம்பெற்ற பின்பே குறித்த இடங்கள் பயன்பாட்டிற்குரியதாக ஆக்கப்படும்.

ஆக, மின் ஒழுக்குக் காரணமாக மருந்துக் களஞ்சியம் எரிந்து, பல கோடி ரூபா பெறுமதியான – சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்து வகைகள் அழிந்து போவதென்பது சாதாரணமான விடயமல்ல.

எனவே மின் ஒழுக்கு ஏற்பட்டதாயின், அது தொடர்பில் அசமந்தமாகச் செயற்பட்டவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

மாறாக, மின் ஒழுக்குத் தவிர்ந்த வேறு காரணங்கள் ஏதேனும் இருப்பின் அதனை விசாரணைகளில் கண்டறிந்து உரியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதும் கட்டாயமானது.

அதேநேரம் மருந்துக் களஞ்சியம் எரிந்து போனதால் ஏற்படக்கூடிய மருந்துத் தட்டுப்பாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யும் பொருட்டு சமய மற்றும் பொது அமைப்புகள், பொதுமக்கள், வர்த்தக சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் தேவையான மருந்துப் பொருட்களை யாழ். போதனா வைத்தியசாலைக்குப் பெற்றுக் கொடுத்து, சிகிச்சைகள் இடையூறின்றி நடைபெறுவதற்கும் ஏழை நோயாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் ஆவன செய்ய வேண்டும்.

## முதல்வராகப் பொறுப்பேற்ற விஜயை வாழ்த்திய சஜித்

(கொழும்பு)

தமிழகத்தின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ள தமிழக முதல்வர் விஜய்க்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மையை அடித்தளமாகக்கொண்ட ஒரு புதிய யுகத்தைப் பற்றி நீங்கள் பேசினீர்கள். வெறுப்பு மற்றும் பழைய காயங்களின் மீது மட்டுமே கட்டப்படும் சமூகங்கள் இறுதியில் தனிமைப்படுத்தப்படும் என்பதையும் அதே நேரத்தில் நீதி மற்றும் சக வாழ்வின் மீது கட்டப்படும் சமூகங்களே மக்கள் உண்மையாக வாழ விரும்பும் எதிர்காலத்தை உருவாக்கும் என்பதையும் வரலாறு நமக்குக் காட்டியுள்ளது.

உலகம் ஏற்கெனவே பிரிவினைகளால் நிறைந்துள்ளது. நம் பிராந்தியத்தில் உள்ள மக்கள் அனைவரும் மொழி, மதம் அல்லது அடையாளம் கடந்து உண்மையாக எதிர்பார்ப்பது சமூக முன்னேற்றம், நீதி மற்றும் நிலையான தன்மையையே ஆகும். நம்மைப் பிரிக்கும் விடயங்களை விட நம்மிடையேயுள்ள பொதுவான பண்புகளும் ஒற்றுமைகளும் மிக அதிகம்.

இந்தப் புதிய அத்தியாயம் முன்னேற்றத்தையும் கருணையையும் கடந்த காலத்தில் மற்றவர்கள் இடைவெளியை உருவாக்கிய இடங்களில் ஒருமித்த புரிதலையும் ஏற்படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

## தெற்கு அதிவேக வீதியில் கார் - லொறி விபத்து
### பத்துப்பேர் காயம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியின் பெலியத்த மற்றும் கசாகல ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட 154 ஆவது மைல் கல்லுக்கருகில் இடம்பெற்ற விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ள நிலையில்,

அனைவரும் தற்போது தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாணந்துறைப் பகுதியைச் சேர்ந்த மின்சார சபை ஊழியர்களை ஏற்றிக்கொண்டு கதிர்காமம் நோக்கிப் பயணித்த கார் ஒன்று, முன்னால் சென்ற லொறியின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் குறித்த லொறி வீதியில கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## கொழும்பு பிரதான வீதி வெள்ளத்தில் ◇◇◇◇◇

(கொழும்பு)

வெல்லவாய மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று (10) இரவு பெய்த கடும் மழை காரணமாக வெல்லவாய - கொழும்பு பிரதான வீதியின் சில இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெல்லவாய கங்காராம விகாரை மற்றும் எதிலிவெவ ஆகிய பகுதிகள் இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக அந்தப் பகுதிகளில் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (ந-7)

## அரசாங்கத்தின் விருப்பிற்கு எதிரானோருக்கு அச்சுறுத்தல்
### சாடுகிறார் நாமல் எம்.பி

அரசாங்கத்தின் தேவைகளை நிறைவேற்றத் தவறினால் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹிரியால பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

தற்போது நாட்டில் நபர்கள் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். சட்டம் வளைக்கப்படுகின்றது. அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. அரசாங்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தமக்குச் சாதகமான வாக்குமூலங்களை எழுதி வாங்குவதற்கு முயற்சிகள் நடக்கின்றன. அரசாங்கத்தின் விருப்பத்திற்கு இணங்க மறுப்பவர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

எமக்கு எட்டிய தூரம் வரை எந்தத் தேர்தலும் தென்படவில்லை. மாகாணசபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதும் எமக்குத் தெரியாது. இருப்பினும் இந்த நாட்டை நேசிக்கும் மக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு தொகுதியிலும் எமது கட்சியைச் சுற்றி ஒன்றிணைந்து வருகின்றனர் என்றார். (ந-7)

## வாகன விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

இரத்தினபுரி - பலாங்கொடை வீதியின் பத்கம் கொட சந்திக்கருகில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பலாங்கொடையிலிருந்து பெல்மடுல்ல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் கஹவத்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பெல்மடுல்ல பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பெல்மடுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

## கொழும்புக் கடலிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

கொழும்புத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள கடற்பரப்பில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடற்பரப்பில் சடலம் ஒன்று மிதந்து காணப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கொழும்பு துறைமுகப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


சுமார் 5 அடி 6 அங்குலம் உயரமுடைய இவர், குட்டையாக வெட்டப்பட்ட தலைமுடி மற்றும் தாடியுடன் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரஸ்தாப நபர் உயிரிழந்த போது கறுப்பு நிற அரைக் காற்சட்டை மற்றும் பழுப்பு நிற ரீ-சேர்ட் அணிந்திருந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு துறைமுகப்-பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் உருளைக் கிழங்கிற்கு உத்தரவாத விலை அறிவிப்பு



**(கொழும்பு) —————————————— உள்ளூர் உருளைக்கிழங்கு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில், உருளைக் கிழங்கிற்கான உத்தரவாத விலையை வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.**

அதன்படி, ஒரு கிலோ உள்ளூர் உருளைக் கிழங்கு 220 ரூபா என்ற உத்தரவாத விலையில் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஊடாக இந்தக் கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் உள்ளூர் உருளைக் கிழங்குகள் லங்கா சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக மக்களுக்கு மானிய விலையில் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் விவசாயிகளுக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்துவதுடன், நுகர்வோருக்கும் குறைந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும். (8)

# இலங்கையின் கையிருப்பு மீண்டும் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு சொத்துக்கள், 2026 ஏப்ரல் மாத இறுதியில் மீண்டும் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் கீழ் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள புதிய தரவுகள் தெரிவிக்கின்றன. மத்திய வங்கியின் அண்மைக் கால அறிக்கையின் படி, கடந்த மார்ச் மாத இறுதியில் 7.026 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு, ஏப்ரல் மாத இறுதியில் 6.759 பில்லியன் டொலர்களாகக் குறைந்துள்ளது.

கையிருப்பின் முக்கிய அங்கமான அந்நிய செலாவணி கையிருப்பு, 6.8 பில்லியன் டொலர்களில் இருந்து 6.505 பில்லியன் டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும் நாட்டின் தங்கக் கையிருப்பும் சிறிய அளவில் சரிவைச் சந்தித்துள்ளது.

மார்ச் மாதத்தில் 222 மில்லியன் டொலர்களாக இருந்த இது, ஏப்ரலில் 219 மில்லியன் டொலர்களாகக் குறைந்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதியில் முதல் முறையாக, 2026 பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் கையிருப்பு 7.284 பில்லியன் டொலர்களை எட்டிப் பெரும் மைல்கல்லைக் கடந்திருந்தது.

இருப்பினும், மார்ச் மாதத்தில் 3.5% சரிவைச் சந்தித்த கையிருப்பு, தற்போது ஏப்ரல் மாதத்திலும் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி, வெளிநாட்டு கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் இறக்குமதிச் செலவுகள் போன்ற காரணிகளே இந்தத் தொடர் சரிவுக்குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கோடைகால வெள்ளரிப்பழமும் மருத்துவக் குணங்களும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கோடைகாலத்து இயற்கை கொடையே வெள்ளரிப்பழமாகும்.

இது அதிக நீர்ச்சத்து மற்றும் குளிர்ச்சித்தன்மை கொண்டது. இது கோடைக் காலத்தில் உடற் சூட்டைத் தணித்து, நாவறட்சியைப் போக்கி, உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கிறது.

வெயிலின் தாக்கத்தை சமாளிப்பதற்காக மக்கள் அதிகம் விரும்பி சாப்பிடக் கூடிய பழங்களில் ஒன்று வெள்ளரிப்பழம். தற்போதைய பருவகாலத்தில் வெள்ளரிப்பழங்கள் அதிகளவில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறன.

கோடைகாலத்தில் இந்தப் பழத்தை நாம் உண்ணும் போது நமக்கு பல்வேறு ஆரோக்கிய பலன்கள் கிடைக்கின்றன. இது தாகத்தை தீர்க்கும் ஒரு மிகச் சிறந்த பழமாகும். இந்தப் பழத்தில் எவ்வளவு சுவை நிரம்பி இருக்கிறதோ அந்த அளவுக்கு ஆரோக்கிய குணமும் நிரம்பியுள்ளது. இந்தப் பழத்தில் விற்றமின் C மற்றும் A, பொட்டாசியம் ஆகிய சிறந்த சத்துக்கள் உள்ளன.

மேலும் இதில் உயிர் சத்து B1, B6 மற்றும் K, போலேற்று, செம்பு, மக்னீசியம், மற்றும் நார்ச்சத்துக்களும் நிறைந்து காணப்படுகின்றன.

வெள்ளரிப்பழச் சுவையில் இனிப்பும் இல்லாமல் வித்தியாசமான சுவையில் இருக்கும். சாப்பிட மாவு போலவும், முலாம்பழத்தை போன்றும் சுவை இருக்கும்.


அதனால் நீரிழிவு பிரச்சினை உள்ளவர்களும் இந்தப் பழத்தைச் சாப்பிடலாம். மேலும் கூடுதல் சுவைக்காக் சிலர் இப் பழத்துடன் சர்க்கரை சேர்த்தும் சாப்பிடுவார்கள். வெள்ளரிப்பழத்தில் நீர்ச்சத்து அதிகமாக நிறைந்து காணப்படும். இதனால் கோடைக் காலங்களில் நமது உடல் நீர்ச்சத்துடன் இருக்க இந்தப் பழம் பெரிதும் உதவுகிறது. அதிக வெப்ப காலங்களில் நமது உடலை குளிர்வித்து வெப்பத்தில் இருந்து பாதுகாக்கிறது. இதில் அடங்கியுள்ள முக்கிய விற்றமின்கள் மற்றும் தாதுக்கள் தேவையான சத்துக்களை நமது உடலுக்கு வழங்குகிறது. வெள்ளரிப்பழத்தில் பொட்டாசியம் சத்து நிறைந்து காணப்படுகிறது.

பொதுவாக உடலில் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த உதவும். எனவே இந்த பழத்தை நாம் உணவுகளில் சேர்த்துக் கொள்ளும் போது, நமது உடலின் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த இந்தப் பழம் உதவுகிறது.

கண்ணுக்கு மிகச் சிறந்த ஆரோக்கியம் தரும் மருந்தாக இந்த வெள்ளரிப்பழம் உள்ளது. இந்தப் பழத்தில் பீட்டா கரோட்டின் நிறைந்து இருப்பதால், கண்பார்வை மேம்படுத்தவும், கண்புரை போன்ற பிரச்சினைகள் வராமல் தடுக்கவும் உதவுகிறது.

இப் பழத்தில் மிகக் குறைந்தளவே கொழுப்புச் சத்து இருப்பதால் எடை குறைப்பில் இது பெரும் பங்கு வகிக்கிறது.

இந்தப் பழம் சர்க்கரை உயர்த்தும் திறன் குறைவாக



இருப்பதனால் நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தலாம்.

ஆனால் யூசாக பருகாமல், தனிப்பழமாக தினம் 30 கிராம் அளவு சாப்பிடலாம்.

இப் பழத்தில் காணப்படும் உயிர்ச்சத்துக்களும், தாதுப் பொருட்களும் உடலிற்கு ஆற்றலை வழங்குவதோடு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

ஒருவருக்கு மலச்சிக்கல் பிரச்சினை உள்ளது என்றால் அதை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

வெள்ளரிப்பழத்தைச் சாப்பிட்டால் அப் பழங்களில் காணப்படும் நார்ச்சத்து மலச்சிக்கல் பிரச்சினைகளை தீர்க்கக்கூடியது.

வெள்ளரிப்பழத்தில் நிறைந்துள்ள ஆக்ஸிகைன் எனப்படும் சத்து சிறுநீரக கோளாறுகள் மற்றும் கற்களை குணப்படுத்த உதவும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக சிறுநீரக பிரச்சினைகள் வருவதற்கு ஒரு காரணம் நமது உடலில் குறைந்த அளவில் நீர்ச்சத்து காணப்படுவதே.

இந்தப் பழத்தில் அதிக அளவு நீர்ச்சத்து நிரம்பியிருப்பதால் இது சிறுநீரகத்தை சுத்தப்படுத்த உதவுகிறது.

இவ் வெள்ளரிப்பழத்தில் அதிக போலேற்று சத்து அதிக அளவில் உள்ளதால் உடலில் அதிகப்படியான சோடியத்தை அகற்ற இது உதவுகிறது.

அத்துடன் கர்ப்பிணிப் பெண்களும் பயன்படுத்தலாம்.

வெள்ளரிப்பழத்தில் காணப்படும் அடினோசின் இரத்தத்தை மென்மையாக்கும் பண்புகளைக் கொண்டுள்ளது.

இதனால் நமது உடலில் இதயம் சார்ந்த நோய்கள் ஏற்படும் அபாயத்தை குறைக்க இது உதவுகிறது. எனவே இருதய பிரச்சினைகள் வராமல் தடுக்கவும் இப் பழங்களை சாப்பிட வேண்டும். இப் பழத்தை காலை உணவிற்கும் மதிய உணவிற்கும் இடைப்பட்ட நேரத்தில் சாப்பிடுவது சிறந்த பலனைக் கொடுக்கும்.

இப் பழங்களில் காணப்படும் உயிர்ச்சத்து K, மற்றும் C, சிலிக்கா நிறைந்துள்ளதால், சருமத்தை பளபளப்பாக்கி முடி வளர்ச்சிக்கும் உதவுகிறது.

தூக்கமின்மை என்பது இக் காலக்கட்டத்தில் மிகப் பெரும் பிரச்சினையாக உள்ளது.

இயற்கையாகவே இந்த தூக்கமின்மையை போக்கும் ஆற்றல் இந்த வெள்ளரிப்பழத்திற்கு உண்டு.

இந்தப் பழத்தை சாப்பிட்டு வரும் போது இது நரம்புகள் மற்றும் தசைகளை தளர்த்தி சீரான தூக்கத்திற்கு வழி வகுக்கிறது. அத்துடன் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் சாப்பிடலாம். வெள்ளரிப் பழத்தை பசுவின் பால், சர்க்கரை சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் உடல் மேலும் குளிர்ச்சி அடையும்.

அல்லது வெள்ளரிப் பழச்சாறுடன், எலுமிச்சம் பழச்சாறு கலந்து குடித்தால் உடல் மேலும் ஊட்டம் பெறும். எமது பிரதேச தட்பவெப்ப நிலைக்கேற்ப பருவகாலத்தால் இயற்கையாக கிடைக்கும் இப் பழங்களை கோடை காலத்தில் தவறாமல் பயன்படுத்தி உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சுகாதார...

"சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக" நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவினால் முன்வைக்கப்பட்ட இந்தப் பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படும் சுகாதார நிறுவனங்களுக்கு இடையே நிலவும் ஒருங்கிணைப்பு குறைபாடுகளை நீக்கி, வளங்களைச் சரியாகப் பகிர்ந்தளிப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

அத்துடன் மாவட்ட மட்டத்திலான சுகாதாரத் தேவைகளை மக்கள் பங்களிப்புடன் கண்டறிதல், அந்தத் தேவைகளை தேசிய மற்றும் மாகாண சுகாதாரத் திட்டங்களுடன் இணைத்தல், புதிய சுகாதாரத் திட்டங்களை அடையாளம் கண்டு அமைச்சுக்குப் பரிந்துரைத்தல், நடைமுறையிலுள்ள திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து உரிய காலத்திற்குள் நிறைவு செய்ய உதவுதல் போன்றவை புதிய அதிகாரிகளின் கடமைகளாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பொறிமுறையூடாக நாட்டின் சுகாதார சேவையின் தரத்தை உயர்த்தி மக்களுக்கு நம்பிக்கையான சேவையை வழங்க முடியும் என சுகாதார அமைச்சு எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது. (ந-7)

## ஈழத் தமிழர்...

வலுமிக்க தீர்மானங்களைக் கொண்டு வந்து தமிழர்களுக்கு நடந்த இனப் படுகொலைக்கு சர்வதேச நீதியைப் பெற்றுத்தரப் புதிதாக தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள விஜய் முன்வர வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மிகப்பெரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் ஈழத்தமிழர்களின் படுகொலை நடந்த மே மாதம் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள விஜய் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை நன்கு அறிவார். அரசியலில் இவரின் வரவு தமிழ் நாட்டு மக்களிடையே மாத்திரமில்லை உலகத் தமிழர்களிடையே பாரிய எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

2009 ஆண்டுக்கு முற்பட்ட 30 ஆண்டுகளாக மிகுந்த போராட்ட வலிகளோடு பயணித்த ஈழத்தமிழர்கள் இவற்றை அறிந்தவர் என்ற வகையில் அவரின் பார்வை ஈழத்தமிழருக்குரியதாக இருக்கும்.

ஏற்கெனவே முதலமைச்சர்களாக இருந்த ஜெயலலிதா, மு.க.ஸ்டாலின் போன்றோர் தமிழக சட்டசபைகளில் ஈழத்தமிழர்கள் தொடர்பாகக் கொண்டு வந்த தீர்மானங்களை விட வலுமிக்க தீர்மானங்களைக் கொண்டு வந்து தமிழர்களுக்கு நடந்த இனப்படுகொலைக்கு சர்வதேச நீதியைப் பெற்றுத்தர வேண்டும் எனத் தெரிவித்தார். (ந-7)

## மே 18ஐ...

மே 18ஐ முள்ளிவாய்க்கால் இன வழிப்பு நாளாக தமிழ்நாடு சட்ட சபையின் ஆரம்ப அமர்வில் நிறைவேற்றுமாறு தமிழ் நாட்டு முதலமைச்சர் விஜயிடம் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்துள்ளர்.

மேற்படி கோரிக்கை அடங்கிய கடிதம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், நடைபெற்று முடிந்த தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் பாரிய சாதனையை முதல் தடவையிலேயே நிலைநாட்டி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தாங்கள் பதவியேற்றுள்ளமையையிட்டு தமிழ்த் தேசியப் பேரவையினராகிய நாம் மீளவும் எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்களின் முதலாவது சட்ட சபைக் கூட்டத்தில் மே 18 "முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நாளாகப்" பிரகடனம் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## தமிழில்...

விஜய் நேற்று முறைப்படி பதவியேற்றுக்கொண்டநிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவருக்குத் தனது வாழ்த்துகளைத் தனித் தமிழில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

*'தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய் அவர்களுக்கு வாழ்த்துகள். அவரது பதவிக்காலம் சிறப்பானதாக அமைய நல்வாழ்த்துகள்"* என்று தமிழில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு தமிழ்நாடு அரசுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றும் என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள விஜய், தனது தேர்தல் பரப்புரைகளின்போது மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பேன் என்று கூறியிருந்த நிலையில், பிரதமரின் இந்த இணைந்து பணியாற்றுவோம் என்ற அழைப்பு, மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு தடையின்றிக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## தமிழ்...

பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்க உரிமை கோரி தமிழகத்திற்குப் பொறுப்பான ஆளுநருடன், விஜய் உள்ளிட்ட கூட்டணித் தலைவர்கள் நேற்று முன்தினம் மாலை நான்காவது தடவையாக கலந்துரையாடியிருந்தனர்.

இதனையடுத்து ஆட்சியமைப்பதற்கான அனுமதியை தமிழக ஆளுநர் வழங்கியதுடன், எதிர்வரும் 13 ஆம் திகதி சட்டமன்றத்தில் பெரும்பான்மையை உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்.

அதன் பிரகாரம் பதவியேற்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கு சென்னையிலுள்ள நேரு உள்ளக விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இதன்போது தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் ***சி.ஜோசப் விஜய் எனும் நான் ....*** எனத் தொடங்கி முதலமைச்சராக, தமிழக ஆளுநர் அர்லேகர் முன்னிலையில் பொறுப்பேற்றார்.

விஜயுடன் 9 பேர் அமைச்சர்களாகவும் பதவியேற்றனர்.

புஸ்ஸி ஆனந்த், செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார், அருண்ராஜ் உள்ளிட்டோருக்கு முக்கிய அமைச்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

விஜய் முதலமைச்சராகப் பதவியேற்றபோது இந்திய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தியும் உடனிருந்தார். இந்நிகழ்வில் ஏகப்பட்ட பொது மக்கள் பங்கேற்றிருந்தனர். (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2026.05.10 — சீட்டிழுப்பு இலக்கம் 6185 — K 5 3 5 2 0 5
அத சம்பத — K 5 2 0 5 — சீட்டிழுப்பு இலக்கம் 760

சுப தவசக் — திகதி 2026.05.10 — சீட்டிழுப்பு இலக்கம் 8381 — இடபம் 03 12 33 — 3541

தன நிதானய — திகதி - 2026.05.10 — சீட்டிழுப்பு இலக்கம் - 2215 — R 08 23 34 54 R — ஞாயிறு போனஸ் இலக்கம் 0228

மெகா பவர் — திகதி 10/05/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2533 — J 01 11 28 38 78

ஜய — திகதி 2026.05.10 — சீட்டிழுப்பு இலக்கம் 453 — U 4 4 5 4 — ஞாயிறு போனஸ் இலக்கம் 1219

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4427 — சீட்டிழுப்பு திகதி 10.05.2026 — C 18 45 59 64

ஹந்தஹன — HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.05.10 — சீட்டிழுப்பு இலக்கம் 1494 — தனுசு 10 58 60 61 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள் — 10.05.2026 — வெற்றி வாரம் 0893 — J 3 8 9 3 7 9 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,215,276.40

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3159 — 25000 பணப் பரிசு 37087 — சீட்டிழுப்பு திகதி 2026.05.10 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 12 36 48 61 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.123,830,289.60

சனிதா — திகதி 10.05.2026 — வெற்றி வாரம் 5320 — 03 05 27 38 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,026,476.80 — 41161

சசிரி — வெற்றி வாரம் 989 — சீட்டிழுப்பு திகதி 10.05.2026 — ஞாயிற்றுக்கிழமை — 18 25 46 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,422,320.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4871 — சீட்டிழுப்பு திகதி 10.05.2026 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 18 20 22 30 — விருச்சிகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — U 23 18 33 39 58 — சீட்டிழுப்பு வாரம் 2335 — 10.05.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.264,054,735.20

அத கோடிபதி — ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம்: 2985 — சீட்டிழுப்பு திகதி: 2026.05.10 — 28 52 57 66 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,064,098.40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலஞ்ச...

முன்னதாக 2013 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸிற்கு 06 எயார்பஸ் A-330 விமானங்கள் மற்றும் 08 எயார்பஸ் A-350 ரக விமானங்களைக் கொள்வனவு செய்தபோது இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக வாக்குமூலம் வழ்ங்குவதற்காக, நாளை 12 ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் அழைப்பை ஏற்று, குறிப்பிட்ட தினத்தில் தாம் ஆஜராகத் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் முன்னாள் தலைமை நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் இறுதிக்கிரியைகள் நேற்று இடம்பெற்றன. நிகழ்வில் பங்கேற்ற பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷவிடம்,

இலஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழுவினால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பாணை குறித்துக் கேட்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் நிச்சயமாக நான் ஆணைக் குழுவில் முன்னிலையாவேன். நாம் அங்கு சென்றுதானே ஆகவேண்டும் எனவும் பதிலளித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸிற்கு 06 எயார்பஸ் A-330 விமானங்கள் மற்றும் 08 எயார்பஸ் A-350 ரக விமானங்களைக் கொள்வனவு செய்த போது 02 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகப் பெற்றதாக அப்போதைய தலைமை நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி நியோமாலி விஜேநாயக்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

விசாரணைகளின் போது, தமக்குக் கிடைத்த 02 மில்லியன் டொலர்களில் 20 மில்லியன் ரூபாவை அப்போதைய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவிற்கும், 60 மில்லியன் ரூபாவை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் வழங்கியதாக கபில சந்திரசேன கூறியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இவ்வாறான பின்னணியிலேயே கபில சந்திரசேனவின் மர்ம மரணமும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஆசிரியர்...

இன்றுமுதல் ஆரம்பமாகவுள்ளன.

செய்முறைப் பரீட்சை உள்ளடங்கலாக எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மூன்று பரீட்சை மையங்களில் இந்தப் பரீட்சைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கெனவே அந்தந்த ஆசிரியர் கலாசாலைகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளமான www.doenets.lk ஊடாகவும் இந்த அனுமதி அட்டைகளைத் தரவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5610)

076 825 7716 (ஆகாஸ்)

**A/L 2026 FINAL SEMINAR ACCOUNTING**

KBK ACCOUNTING

**K. BALAKAJEN**

ஆரம்பம்

DIRECT - 15.05.2026 வெள்ளி பி.ப 02.00 மணி

ZOOM - 12.05.2026 செவ்வாய் இரவு 08.30 மணி

இடம் – NEC யாழ்நகர்

◆ வெளிமாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
◆ பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.
◆ கையேடுகள் வழங்கப்படும்.

(C-5609)

Contact 077 452 0043

**உடனடி வேலைவாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

21 வயதில் இருந்து 40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்

A/L அல்லது அதற்கு சமமான கல்வி தகுதிகள் எதிர்பார்க்கின்றோம்

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Metro Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-5611)

V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
0777 068 777


## பொது அறிவித்தல்

### விலைமனுக்கள் கோரல்

வண். ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் திருப்பணி வேலைகளுக்கு தொழிலாளர் கூலி அடிப்படையில் மூடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அனைத்து மூலப்பொருட்களும் (Raw materials) கோவில் நிர்வாகத்தால் வழங்கப்படும்.

**வேலை விபரங்கள்:**

1. தற்போதுள்ள கூரை அமைப்பின் திருத்தம் மற்றும் புனரமைப்பு.
2. தேவையான கொங்கிறீற் தளங்களுக்கு நீர்க்கசிவு தடுப்பு வேலை.
3. கூரை மற்றும் தளங்களின் மழைநீர் வடிந்தோடுவதற்கு, சரியான சாய்வுடன் மீள்படுக்கையிட்டு நீர்க்கசிவு தடுத்தல்.
3. வடிகால் அமைப்பை மீள்நிர்மாணம் செய்தல் & மேம்படுத்தல்.
4. திட்டத்தை திருப்திகரமாக பூர்த்தி செய்வதற்குத் தேவையான அனைத்து துணை மற்றும் இறுதிகட்ட வேலைகள்.

- அனைத்து வேலைகளும் ஒரே ஒப்பந்தத்தின் கீழ் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- கோவில் / சமய நிறுவன கட்டுமான வேலைகளில் முன் அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- அனைத்து வேலைக்கும் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

**இடப்பார்வை: 13 & 14.05.2026 9:30am முதல் 11:30am வரை**

**தொடர்பு / WhatsApp: 077 922 1161 / 0777 168 777**

விலைமனுக்கள் "வண். ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் புனரமைப்பு விலைமனு" என குறிப்பிட்டு, 22 மே 2026, பி.ப. 4:00 மணிக்கு முன்னதாக கிடைக்கச் செய்யப்பட வேண்டும்:

அனுப்ப வேண்டிய முகவரி:

**பெறுநர், வண். ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில்,**
**பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.**

* விண்ணப்பப் படிவத்திற்கு WhatsApp மூலம் தொடர்பு கொள்ளவும்
* பெறுநரின் முடிவு இறுதியானது

பெறுநர், வண். ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில்,
11-May-2026.

(7590)


**கணிதம், ICT வகுப்புக்கள்**

தரம் 6 தொடக்கம் 10, 11 வரை கணிதம், ICT வகுப்புக்கள் தமிழ் மொழி மூலமும் ஆங்கில மொழி மூலமும் தனி வகுப்புக்கள், குழு வகுப்புக்கள் உங்கள் வீட்டிற்கே வந்து கற்பிக்கப்படும். (7578)

தொடர்பு : 076 330 1735

**வேலையாள் தேவை**

கடையில் Bill + காசாளர் வேலை சேர்த்துப் பார்ப்பதற்கு 65 வயதிற்கு மேற்பட்ட ஓய்வுபெற்ற ஆண் ஒருவர் தேவை.
மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி ஆகிய இடங்களில் வசிப்பவர் விரும்பத்தக்கது. (2317)

077 609 6581

**வீடு வாடகைக்கு**

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள குட்செற் வீதியில் 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (7585)

077 624 1047

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் காக்கைதீவு சந்தைக்கு எதிரே யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன் 48 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

◆ மூன்று, மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் அனைத்துக் காணிகளும் காபற் வீதி முகப்புடன்.
◆ பரம்பரை ஆவணங்கள் 1940 ஆம் ஆண்டிலிருந்து உறுதி, தோம்பு சரியான முறையில் உள்ளது.
◆ யாழ். பஸ் நிலையம் 2Km தூரம்.
◆ வீடு, கடைகள், திருமணமண்டபம், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் சகல வியாபார நிலையங்களும் அமைப்பதற்கும் உகந்த இடம்.
◆ விலை நேரில் பேசித் தீர்மானிக்க முடியும்.

(2319)

தொடர்பு : 076 977 2341, 077 988 6389, 076 077 2674

**வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை**

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

**அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349



(C-5608)

○ அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன். ○ 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
○ அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
○ உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

கிளைகள்: # 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | # 01, பெற்[illegible] எதிரில் பருத்தித்துறை. | கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.